


# காஞ்சி
வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணு

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2004 மார்கழி 8 (23-12-73) | இதழ்: 24


★


உள்ளே......

திரு. வி. க. கூறுகிறார்
(தம்பிக்கு அண்ணுவின் மடல்)

★

தட்டிக்கேட்கும் தமிழகம்
(தலையங்கம்)

★

மறு வாழ்வு
(குறுநாவல்)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)


★

## அலைகடலின் அன்பன்!

கவிஞர். இலக்கியன்

கூனிக் குறுகிவந்த குள்ளமனச் சமுதாயம்
நாணித் தலைகுனிந்து நடைபோட்ட நேரத்தில்
வானின் உயர்வாக வாழவழி சொன்னவனே!
ஆணித் தரமான அறவழியில் முன்னவனே!

காலைக் கதிரவனுய்! கருத்தூட்டும் புதியவனுய்!
நாளை நடப்புக்கு நலம்கூறும் நல்லவனுய்!
வாலைக் குமரியவள் வண்டமிழின் காவலனுய்!
ஏழைக் குடிகளிடம் ஏற்றமுற்ற எம் அண்ணு!

பொறுமைக் குயிரீந்து பொங்குகட லோரத்தில்
அருமைத் துயில்கொள்ளும் அலுவலுக்கு விடுப்பளித்து
பெருமைக் குரியதுவாம் பைந்தமிழ்மண் வந்திடுவீர்
சிறுமைக் குரியாரைச் சிறுநகையால் தேற்றிடுவீர்!

ஒருநாள் இங்குவரின் ஒய்யார நடைகொண்டு
கருணு நிதியாளும் கவிஞுட்சி கண்டிடுவீர்!
திருநாள் எனவாகும் தீந்தமிழன் நும்வருகை!
ஒருநாள் அவ்வருகை ஒண்டமிழர்க் காகாதோ?

சாதிச் சாக்கடையை சந்தனமென் றேபூசி
நீதிக் குரியவர்கள் நாங்களெனச் சொன்ஞேரை
ஓதித் திருத்தியநீர் ஓயாபே ரலைகளுடன்
வாதித் தெங்களுடை வாழ்வறிந்து மகிழ்வீரோ!

தங்கத் திருமகனே! தாங்காத புகழ்மகனே!
வங்கக் கடலருகே வாழ்வேற்ற தலைமகனே!
இங்குன் புகழ்நாளை எளியோர்கள் நினைக்கின்ருேம்
தங்கும் அருள்பொழிந்து தம்பிகளை வாழ்த்திடுவீர்!

விலை: 0-25 காசு

**இளைய தலைமுறையின் எழுச்சிக் குரல்:**

# "சுளைதான் பழமரமல்ல!"

இல. இராமதாசு, பி.ஏ.,

"பலாச்சுளை கேட்டனர், கேட்டபோது தர மறுத்தனர் பலாப்பழத்தையே பறித்துக் கொண்டனர். இல்லை...இல்லை பலா மரத்துக்கே அவர்கள் சொந்தக்காரர்களாகி விட்டார்கள்."

முதல்வர் கலைஞர், வங்கத்தின் விடுதலையை அழகாக நயம்படக் கூறுகிறார்;

வங்கமக்கள் கேட்டது மாநில சுயாட்சி—பலாச் சுளை. தர மறுத்தனர் அதிகார வெறியர்கள். அதன் விளைவு—இன்று வங்கம் தனி நாடாகத் தோன்றிவிட்டது. பலாமரமே அவர்களுக்குச் சொந்தம்.

நாம் இன்று கேட்டது பலாசுளைதான். பலா பரமல்ல. இதை ஆயிரம் முறை அடித்து, அழுத்தந் திருத்தமாக அறிவித்துவிட்டார் தானைத் தலைவர் கலைஞர். புரிந்துவிட்டது அவர்களுக்கு, ஆனால் புரியாதது போல் நடிக்கின்றனர். தெரிந்துவிட்டது, ஆனால் தெரியாததுபோல் நடிக்கின்றனர். உண்மையாகத் தூங்குபவனை எழுப்பினால் எழுந்துவிடுவான். பொய்யாகத் தூங்குபவனை எழுப்பினால்?......... கட்டிடமே இடிந்தாலும் அசையமாட்டான்.

"மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்தான் தேவையே தவிர தனித்து இயங்கும் தன்மையல்ல, நாங்கள் கேட்பதும் அதுவேதான். தனிநாடல்ல பிரிவினைக்கு முதல் எதிரி நாங்கள். பழையன கழிந்துவிட்டது. புதியன நாங்கள் கேட்பது. செவி சாயுங்கள்—கருத்தைக் கவனியுங்கள்—கண்களைக் கூர்மையாக்குங்கள்."

இப்படி எத்தனை முறை கூறினோம்! ஆனால் அவையனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆகிவிட்டது.

வேடிக்கை பேசுவதே வாடிக்கையாகி விட்டது. "இனியுமா வாய்ப்பேச்சு, கூடாது—கூடாது. 'கோலெடுத்தால்தான் குரங்காடும்', 'அடியாத மாடு படியாது.' பொறுத்தது போதும் பொங்கியெழுவோம். பேசியது போதும் வீசி எறிவோம் அவர்களது ஆதிக்கத்தை.

இதற்கு மேலும் பொறுக்கமுடியுமா? ஆனால் கழகத் தலைவர் கலைஞர் இன்னும் அவர்களுக்குப் பொறுமையாக பதிலிறுக்கிறார். இன்னும் அவர்களுக்கு விளக்கம் தருகிறார், இன்னும் அவர்கள் கேள்விகளுக்கு விடையளிக்கின்றார். அவர்களுக்குத் தெரியாதா? முதல்வர் கலைஞர் கேட்பது சுயாட்சியல்ல, மாநில சுயாட்சிதான் என்று. ஆனால் பூனையைப்பார்த்து புலி...புலி...புலி...'என்றுகதறுகின்றார்கள். கதை தெரியாது அவர்களுக்கு. 'புலி...புலி புலி...'என்று ஊர் மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தான் ஒரு கோணங்கி. மக்கள் சென்று ஏமாந்தனர். ஆனால் ஒருநாள் உண்மையாகவே புலி வந்து விட்டது. அவனது கூக்குரலுக்கு அங்கு எவரும் வரவில்லை. விளைவு—இறந்தான்.

அது போன்றுதான் நாம் மாநில சுயாட்சியைப் பூனைத்தான் என்று கூறுகின்றோம். அவர்களோ 'இல்லை. இது புலிதான்' என்று கூறுகின்றார்கள். இனி எப்படி விளக்குவது?

கேவலம் நமது மாநிலத்தில் கோட்டை எதிரே இருக்கின்ற பூங்காவில் இருக்கும் புல்லைச் செதுக்கக் கூட மத்திய அரசின் அதிகாரம் தேவை என்றால், நாம் இனி செய்ய வேண்டுவது என்ன? எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இதற்குமேல் கேட்டால் "இப்போதுள்ள அரசியல் சட்டத்திலேயே மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரங்கள் இருக்கிறது." இப்படிப்பட்ட பதில் வருகின்றது. எங்கே இருக்கின்றது? மாநில மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய உருப்படியான அதிகாரம் மாநில அரசு கையில் இருக்கிறதா? இல்லை! அரிசிவேண்டுமா? டெல்லி. கோதுமை வேண்டுமா? டெல்லி. வேலை வாய்ப்பு வேண்டுமா? டெல்லி. திட்டங்கள் போட வேண்டுமா? டெல்லி. போட்ட திட்டங்களுக்குப் பணம் வேண்டுமா? டெல்லி. இப்படியே போனால் நாளை உட்காருவதற்கும் எழுதுவதற்கும் டெல்லியையே கேட்க வேண்டும். ஆணும் பெண்ணும் சேருவதற்கும் டெல்லியைக் கேட்கவேண்டும், என்று வந்தால் உண்மையில் வியப்படைவதற்கில்லை.

எனவேதான் வருங்கால சமுதாயமாவது செழிப்புடன் விளங்கட்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியின் விதையை விதைத்தார். அதைப் போற்றி வளர்த்து இன்று அறுவடைக்கு நாள் பார்க்கின்றார் முதல்வர் கலைஞர். அந்த அறுவடைக்கு ஏதம் ஏதுமின்றி காப்பதுவே, தமிழர்களாகிய நமது தலையாய கடமையாகும். அழிந்து பட்டாகிலும் மாநில சுயாட்சியை அடைந்தே தீருவோம். இது உறுதி; என்னும் சூளுரையை மேற்கொள்வோம்; சுடர்முகம் தூக்குவோம்; சூழ்ச்சியினைச் சுக்குநூறுக்குவோம்! ஆட்சியெனில் 'மாநில சுயாட்சி' என அமைத்துக் காட்டுவோம்.

★

காஞ்சி வார இதழ்
நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 23—12—73 | இதழ் 24

# தட்டிக் கேட்கும் தமிழகம்

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களின் உரிமைகளுக்காக வாதாடும் ஒப்பற்ற மாநிலமாக நம் தமிழ்நாடு திகழ்வது, நமக்கெல்லாம் தனிப் பெருமையளிப்பதாகும்.

அதிகாரங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் குவிந்திருப்பது 'ஆரோக்கிய'மான அரசியலுக்கு அழகன்று; 'வல்லாட்சி' அமைவதற்கே அது வழிகோலுவதாய் அமையும்; 'சர்வாதிகார' வாயிலின் திறவுகோலாகவும் அது மாறும்.

தில்லியின் அதிகாரக் குவியலைத் தீரமுடன் எதிர்த்து, இதர மாநிலங்களுக்கும் சேர்த்து—இந்தியத்தின் ஒற்றுமையையும் நினைவிற் கொண்டு 'மாநில சுயாட்சி' என்னும் இலட்சியக் குரல் கொடுப்பது நம் தமிழ்நாடு மாநிலம் தானே.

அனைத்து மாநிலங்களுக்காகவும் வாதாடும் ஆற்றல் பெற்ற அரும்பெருந் தலைவர்தான் முதல்வர் கலைஞர் என்பதனை, அண்மையில் தில்லித் தலைநகரில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரையினைப் படித்தவர்கள் எவரும் ஒப்புக் கொண்டே தீருவர்.

**"......மாநில அரசுக்கு உட்பட்ட துறைகளில் மத்திய அரசு தலையிட்டு நேரடியாக முதலீடு செய்வது ஏன்? நடப்பது கூட்டாட்சியா? இரட்டை ஆட்சியா? நாட்டு ஒருமைப்பாட்டிலும், ஒற்றுமையிலும் முழுமையான பொருளிருக்க வேண்டுமானால் எங்களுக்கு நியாயமான பங்கு தாரீர்!"**

எனத் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் தீரமுடன் வாதாடும் வழக்கறிஞராகவே நாம் அவரைக் காணுகின்றோம்; உரிமைக்குக் குரல் கொடுக்கும் அவர் நெஞ்சுரம் கண்டு உளம் மகிழ்கின்றோம்!

**"மாநில அரசுத் திட்டங்களாக இருக்கின்ற பணிகளில் மத்திய அரசுத் திட்டங்கள் என்று எவையும் இருக்கக்கூடாது என்பதை நான் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூற விழைகின்றேன்."**

—என்று வலியுறுத்தித் தன் கருத்தினை எடுத்துவைக்கும் பாங்கும் அனைவரது பாராட்டினையும் பெற்றுத் திகழ்கிறது.

ஏனைய மாநிலங்களெல்லாம் தில்லித் தலைமையைத் தட்டிக் கேட்க இயலாத நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, தட்டிக் கேட்கும் மாநிலமாக நம் தமிழகம் திகழ்வது, நாமெல்லாம் பெருமைப்படக் கூடிய தலையாய ஒன்றாகும்.

தட்டிக் கேட்கும் தமிழக அரசைக் கட்டிக் காக்க வேண்டியது அனைவரது கடமையுமாகும்.

—மணிவேந்தன்.

## '52-ஆம் பிறந்த நாள்'

# அகம்நிறைந்த வாழ்த்து!



**பண்பாளர் அன்பழகர் பெருமை அன்றே**
**பாவேந்தர் பாட்டினிலே சிறக்கக் கண்டோம்!**
**கண்போலச் செந்தமிழைக் காக்கும் தீரர்**
**கடுஞ்சிறைக்கும் கல்லடிக்கும் கலங்கா வீரர்**
**அண்ணாவின் அரவணைப்பில் ஒளிர்ந்த முத்தாம்**
**அன்பழகர், தஞ்சைநமக்(கு) அளித்த சொத்தாம்!**
**புண்ணியத்தாய் பெற்றெடுத்த புதல்வர் வாழ்க!**
**பூவுலகில் அன்பழகர் என்றும் வாழ்க!!**

**—மணிவேந்தன்.**

# பரணிக்கோர் செயங்கொண்டான்

(புலவர் து. அரங்கன்)

தாழிசையால் தமிழ்ப்பாடி செயமே கொண்டான்
தார்மார்பன் படைநடத்திச் செயமே
கொண்டான்
தாழிசைக்குப் பொற்றேங்காய் ஒன்று வீதம்
தமிழ்ப்புலவன் செயங்கொண்டான் பரிசு
கொண்டான்.
வாழியெந்தன் குலோத்துங்கன் வாழ்க வென்று
வயப்புலிதான் இமயத்தில் வாழ்த்தி நிற்கும்
ஏழிரண்டு உலகமிதில் சோழ வேந்தன்
இசைவிளங்க கலிங்கத்தை வெற்றி கண்டான்.

மதக்களிற்றை ஆயிரத்தை அமரில் மாய்த்த
மானவனுக்கு வகுப்பதுதான் பரணி என்பர்
எதிர்த்தழிக்கும் அமர்க்களத்தில் பரண்மேல் நின்று
இசைக்கின்ற பெரும்பாட்டே பரணி என்பர்
துதிக்கின்ற நல்பரணி தன்னில் பேய்கள்
தொகையாகக் கூழ்சமைத்து உண்ணல் என்பர்
மதிக்கின்ற பரணிக்குச் செயமே கொண்டான்
மாத்தமிழின் மகுடமாகப் பரணி சொன்னான்.

கடைதிறப்பு என்கின்ற பகுதி தன்னில்
காதல்மடை திறக்கின்றான் சொர்க்க லோகம்
கடைவிழியர் களப்போரில் வீரர் வீழ்வர்
சிற்றிடையர் மலர்க்கரத்தில் அரும்பாய் பாய்வர்
விடிகின்ற வரை இன்ப இதழ்கள் பேசும்
இளமார்பில் கண்ணுறங்கி இன்பங் காண்பர்
வடித்தேனும் இதழ்சிவப்பை விழிகள் வாங்கும்
வரிக்கண்ணின் நல்வெளுப்பை வாய்தான்
தாங்கும்.

காடுபற்றிப் பாடுகின்ற காதை தன்னில்
கரிந்திருக்கும் மரனெல்லாம் கழுகு சுற்றும்
வேகின்ற தீத்தகடாய் பூமி வேகும்
சிறுமணலின் பொடியொன்று கடலை உண்ணும்
ஓடுகின்ற மான்கூட்டம் தம்வாய் நீரை
விரும்புகின்ற நன்னீராய் நக்கி விக்கும்
நாடிவரும் இருசுடரும் அஞ்சி யோடும்
நடுங்கவைக்கும் தீக்காட்டின் கொடுமை பாரீர்.

பட்டமன்னர் பெருந்தலைகள் கல்லாய் ஆக்கிப்
பெருகியோடும் குருதிநிணம் சேற்றாய் கூட்டி
விட்டெறிந்த கணையத்தைத் தூணாய் தூக்கி
வேழத்தின் வெண்கோட்டைப் பாவாய் ஆக்கிக்
கெட்டழிந்த பகைமன்னர் கொடிகள் எல்லாம்
முகட்டுக்கு இடுகின்ற கூரை யாக்கிக்
கட்டுவித்த கொலைக்காளி கோயில் முன்னே
கடுமறவர் தலைஉடல்கள் நடமிட் டாடும்.

நெடும்பனையாம் பேய்க்கூட்டம் பசியால் வாடும்
உட்குழிந்த அதன்கண்கள் குகையே மானும்
நெடுஞ்செவிகள் கூகைவாழ் இல்ல மாகும்
நீண்டிருக்கும் அதன்பற்கள் கலப்பை யாகும்
அடியிடறி மூளைச்சேற்றில் ஒருபேய் வீழும்
அட்டகூழை உண்டுமை ஒருபேய் ஆகும்
அடித்தேகும் குருதியாற்றில் ஒருபேய் ஆடும்
அத்தனைக்கும் ஜாலவித்தைஒரு பேய் காட்டும்

குலோத்துங்கன் நற்கச்சி பதியின் கண்ணே
கோமாதர் நல்லமைச்சர் கொலுவீற் றிருந்தான்
நலத்தக்க பல்லரசர் திறைகள் இட்டுத்
முடிவணங்க வளவன்பதம் போற்றி நின்றார்.
'உளரிங்குத் திறைசெலுத்தா' மன்னன் என்றான்
உயர்வரைத்தோள் தொண்டைமான்
வணங்கி நின்று
இலையிதுநாள் திறைநமக்குச் செலுத்தா வேந்தன்
இருக்கின்றான் ஒருவன்தான் கலிங்க னென்றான்

தொண்டைமானே முரசுகொட்டு ஆர்த்துச் செல்க!
வடகலிங்கன் நாடழிக்க, எதிர்த்தோன் தன்னைக்
கொண்டிங்கு ஒருநொடியில் சேர்க்க என்றான்
குலத்துக்கே அணிதிலக மான வீரன்!
கண்டவர்கள் குலைநடுங்க சேனை சென்று
கலிங்கத்தைச் சூரையாடி வென்றார் என்ற
எண்டிசையும் புகழ்மணக்கும் வீர காதை
என்றைக்கும் தமிழ்மணத்தைப் பரப்பு மன்றோ!

வளநாட்டான் வாட்படைக்கு ஆற்றா ராகி
வடகலிங்கர் ஓடுகின்றார் தூசு போல
களங்கண்ட சோழர்படை வீரம் பார்த்துக்
கடுங்கூற்றம் கண்விழித்து வியந்த தம்மா!
கொலைப்பிணங்கள் மலைமலையாய் குவிந்த தம்மா
குறைஉடல்கள் குருதியாற்றில் மிதந்த தம்மா
குலைந்திட்டார் பறந்திட்டார் கலிங்க நாட்டார்
மலைந்திட்டார் மாய்த்திட்டார் தமிழ நாட்டார்.

தன்னிழலைத் தான்கண்டு மிரண்டார் சில்லோர்
தலைவணங்கி எமைவிடுக என்றார் சில்லோர்
மன்னிப்பீர் மறந்திடுவீர் என்பார் சில்லோர்
மறைவிடத்து ஓடுதற்கு விரைவர் சில்லோர்
கன்னமதம் யானைமணி கையில் பற்றிக்
கடவுளிசை பாட்டிசைத்துப் பிழைப்பர்
சில்லோர்
முன்னைவினை தீர்ப்பதற்குக் கங்கை யாடி
மீள்கின்றோம் வழிவிடுக என்பார் சில்லோர்.

இப்படித்தான் கலிங்கத்தின் வீரரெல்லாம்
எண்டிசையும் உயிர்தப்பி ஓட்டங் கண்டார்
தப்பாது கலிங்கத்து அரசன் தன்னைத்
தனிச் சிறையில் அடைத்திட்டான் தொண்டை
மானும்
எப்பாலும் தமிழ்வீரம் செழித்து வந்த
எழிற்காலம் நினைக்கின்றோம்! எங்கோ
செல்வோம்!
அக்காலம் பொற்காலம் புகழின் காலம்
அருந்தமிழர் உலாவந்த பண்டைக் காலம்.
புறப்பாட்டின் முரசொலிதான் பரணி ஆகும்
பைந்தமிழர் வாழ்வெல்லாம் பரணி ஆகும்
மறத்தமிழர் புயசரிதை பரணி ஆகும்
மணிமார்பன் புகழாரம் பரணி ஆகும்
உரத்தோளான் உயர்வீரம் பரணி ஆகும்
உயர்சோழன் பெருவாகை பரணி ஆகும்
அறத்தமிழர் வாள்வீச்சு பரணி ஆகும்
அரும்பொன்னி சலங்கையொலி பரணி ஆகும்.

# தம்பிக்கு மடல்



## தம்பி,

**“உணர்ச்சி ஒரு செல்வம். அதனைப் பெற்றதும் துள்ளிக் குதித்து ஓடி ஆடி அதனைப் பாழாக்கிவிடுவது அறிவுடைமை ஆகாது. அதனை அடக்கி ஆண்டு ஒருமைப்படுத்தி நேரான வழியில் பயன்படுத்தி பலன் அடைவதே அறிவுடைமை யாகும்.”**

அன்பொழுகும் விழியினர் தென்மொழி தேன் மொழியே என்பதனை மெய்ப்பித்த நாவலர், பண்பாடு காப்பாற்றப்பட்டாலன்றி மனித குலத்துக்கே உயர்வு இல்லை என்றுரைத்த பாவலர், திரு. வி, கலியாணசுந்தரனாரின் கருத்தினையே மேலே தந்துள்ளேன். அஃது தமிழரின் இதயத்தில் பொறிக்கப்பட வேண்டியதோர் பொன்மொழி யாகும்.

உணர்ச்சி ஒரு செல்வம்!

அடக்கி ஆண்டிடின் தக்கப்பலன் கிட்டும்,

எங்கு சென்றிடினும் நமது கழகத் தோழர்களிடம் உணர்ச்சிபொங்கி வழிந்திடக் காண்கின்றேன். கொளுத்தும் வெயிலையும் கொட்டும் பனியையும் மழையையும் பொருட்படுத்துகின்றார்களில்லை. கவி பாடிடும்கண்ணினராகக்கூடுகின்றனர்,திரள்திரளாக! எடுத்துக் கூறப்படும் கருத்தினைக் கூர்த்த மதியுடன் ஆய்ந்து பார்த்துக்கொள்கின்றனர். ஈடில்லா ஓர் எழுச்சி! மட்டற்ற ஓர் மகிழ்ச்சி! இந்த நூற்றாண்டின் இணையில்லா விழிப்புணர்ச்சி என்று எண்ணத்தக்க நிலைமை! காண்கின்றேன், களிப்புக் கடலில் மூழ்கிடுகின்றேன். எத்தனைக் கடமை உணர்ச்சி இவர்கட்டு! உழைத்திடும் உத்தமர்களாம் இவர்கள் ஊர் சீர்படப் பாடுபட்டாக வேண்டும் என்ற பண்பு மிக்கோராகவன்றோ விளங்குகின்றனர். ஏழ்மை நலிவு! வாழ்வின் சுமை! எல்லாவற்றையும், தாங்கித் தாங்கி கூனிப்போய் குறுகிப்போய், எதிலும் ஈடுபாடு கொண்டிடத்தக்க தெம்பு அற்றுப்போய், ‘இருக்கின்றோம் இறந்துபட! இறந்துபடும் வரையில் இடர்ப்பாட்டில் உழல்கின்றோம்! என்னே இவ்வாழ்க்கை! எதற்கோ இவ்வாழ்க்கை!’ என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கத்தால் தாக்குண்டு கிடந்திடும் இவர்களா, நாடு, மொழி, வளம், உரிமை, நல்லறம், நல்லாட்சி என்பனபோன்ற இலட்சியங்களை உணர்ந்து, அவைதமைச் செயலிலே கண்டிட கிளம்பிடப் போகிறார்கள், என்ற ஐயப்பாடு குடையும் நிலையினனாகப் புறப்பட்ட என்னையே, அவர்கள் தமது ஆர்வத்தினால், சலியாத உழைப்பினால், தளராத ஊக்கத்தினால், புது நம்பிக்கை கொண்டிடச் செய்துவிட்டனரே!

நான் அவர்களுக்கு உணர்ச்சி ஊட்டிடச் சென்றேன்! அவர்களல்லவா எனக்கு உன்னதமான உணர்ச்சியினைத் தந்துள்ளனர்.

ஏதாகிலும் கிடைத்திடாதா, கிழங்கு கிளிஞ்சல் போன்றவையேனும் என்றெண்ணிப் பூமியினைக் குடைந்திடும் போது, தங்கப்பாளம் கரத்தினில் தட்டுப்பட்டால் பெறுபவன் எத்துணை மகிழ்ச்சிப் பெற்றிடுவான். அந்நிலையன்றோ எனக்கு!

உணர்ச்சி ஒரு செல்வம்! உண்மை! அந்தச் செல்வத்தைக் குவியல் குவியலாக, குன்றன்ன அளவினதாகக் காண்கின்றேன்; ஒவ்வோர் நாளும்; ஒவ்வோர் இடத்திலும்,

காலையிலே; மேயரும் மாவட்டச் செயலாளரும், மணிமொழியாரும் மற்ற நண்பர் சிலரும் மாநில மாநாட்டுக்கான ‘திடல்’ காண அழைத்துச் சென்றனர். சென்ற இடத்திலே, எத்தனை இனிய முகங்கள், நட்பு மொழிகள், வரவேற்கும் கண்கள்!

இடத்திலே கள்ளி காளான் நிரம்ப உள்ளனவே என்கின்றேன்; இதுதான் இடம் என்று தீர்மானித்து விடுங்கள், எட்டே நாளில் இந்த இடம் பட்டுபோல பளபளக்கிறது பாருங்கள் என்கிறார்கள்.

இங்குதான் மாநாடாம்! மாநில மாநாடாம்! தேர்தல் அறிக்கையும் வேட்பாளர் பட்டியலும் வெளியிட அமைகின்ற மாநாடாம்! நமது பக்கத்தில்! நமது பேட்டையில்! நமது வட்டத்தில்!—என்றெல்லாம் பரிவுடன் பேசுகின்றனர். கழகத்திடம் அவர்கள் கொண்டுள்ள பாசம், வைத்துள்ள நம்பிக்கை, தூய்மையானது; அது வளர்ந்தபடியும் இருக்கிறது. வஞ்சகத்தாலும் சதிச் செயலாலும் அதனை வீழ்த்திடவோ குன்றச் செய்திடவோ முடியவில்லை. காலைக் கதிரவன் போன்ற ஓர் எழிலுடன், உயிரூட்டம் தரும் சக்தியுடன், அந்த எழுச்சி விளங்குகிறது.

கோடி கோடியாகக் கொட்டினாலும் கிடைத்திட முடியாத கருவூலம் நமக்குக்

## திரு. வி. க. கூறுகிறார்!

கிடைத்திருக்கிறது; உண்மை உழைப் பாளரின் உணர்ச்சி எனும் செல்வம்.

ஆடவர் மட்டுமல்ல, தாய்மார்கள்; வாலிபர் மட்டு மல்ல, முதியோர்கள், சிறுர்கள்; எல்லோரிடமுமே இந்த உணர்ச்சி ததும்பிடக் காண்கின்றேன்; உள்ளன்பு இருந்திடக் காண்கின்றேன். கண்டதும் ஓர் கனிவு! சொல் கேட்டதும் ஓர் பற்று! அழைத்த தும் ஓர் பாசம்! இதனைவிடச் சிறந்ததோர் செல்வம் எங்கும் இருந்திட முடியாது.

பெருமழையால் வீடிழந்து விம்மிக் கிடந்திடுவோரைக் காணச் செல்கின்றேன், அவர்கள் வாழ்த்தொலி எழுப்பி அல்லவா வரவேற்கிருர்கள்!

அண்ணன் வந்தானுமே உங்கள் அண் ணன்! என்னகொண்டு வந்து தந்தான்? உமது அல்லலைப் போக்கிட ஆளுக்கு ஆயிரம் என்று அள்ளித் தந்தான்?—என்று கேலிமொழி பேசிடக் கூடச் சிலர் உளர், எனினும் அந்த உத்தமர்கள், நான் என்ன தந்தேன் என்று கேட்டார்கள். அண்ணன் வந்தான்! எமது அல்லலைக் கண்டான்! ஆவன செய்திடுவான்!! என்றல்லவா நெஞ்சம் நெகிழக் கூறுகின்றனர்.

அத்தகைய உள்ளன்பும் உணர்ச்சிப்பெருக்கும் நிரம்பியுள்ள நிலை கண்டேன், பெரு மகிழ்வு கொண்டேன்; ஆனுல் மறுகணமோ கவலை என் மனதினைக் குடைந்தெடுக்கலாயிற்று.

இவ்வளவு உள்ளன்பையும் உணர்ச்சிப் பெருக் கையும், துச்சமென்று எண்ணி அல்லவா, ஆளவந் தார்கள், மீண்டும் நாங்களே அரியாசனம் அமர் வோம் என்று கூறுகின்றனர். அகந்தை அது என்போம். ஆயினும் எதனுல் பிறந்துளது அந்த அகந்தை! இத்தனைத் தெளிவாக ஏழை எளியோர், பாட்டாளி விவசாயி, கழகப் பற்றினைத் தெரிவித்திடு வது கண்டும், ஆளவந்தார்கள், மீண்டும் தாமே தேர்தலில் வெற்றிபெறப் போவதாக, எந்தத் தைரியத்திஞல் கூறுகின்றனர்?

எழுச்சி இருக்கிறது; நிரம்ப; ஆனுல் ஏழை யரிடம்!

ஏழையர், விலை கொடுத்து வாங்கிவிடத் தக்கவர்கள்.

உணர்ச்சி இருக்கிறது; நிரம்ப!

ஆனுல் அந்த உணர்ச்சியை மங்கச் செய் திடலாம், மடியச் செய்திடலாம், காசு வீசி!

இவ்விதமாகவன்ருே, தம்பி! காங்கிரஸ் கட்சியினர் எண்ணுகின்றனர். ஏழையர்! ஆகவே அவர்களை விலை கொடுத்து வாங்கிவிடலாம்; பணத்தால் அடித்து வீழ்த்திவிடலாம் என்றல்லவா எண்ணுகின் றனர்.

மனித இதயத்தை, தன்மானத்தை, உரிமை உணர்ச்சியை, கொள்கைப்பற்றை, அவ்வளவு மலிவான பண்டமாக அல்லவா கருதுகின்றனர் பணம் பெருத்தான்கள்!

கேவலம் ஜென்மங்கள் என்றல்லவா கருதுகின்றனர், ஏழையரை!

இதனை எண்ணும்போதுதான் தம்பி! கவலை என் உள்ளத்தைப் பிய்த்துத் தின்னுகிறது.

காங்கிரஸ் ஆளவந்தார்கள் எண்ணு வது போல, ஏழையர் வீழ்ந்துபடுவர் என்ற அச்சம் அல்ல எனக்கு; எங்கனம் அவ்வித மான அச்சத்தை நான் கொள்ளமுடியும். நான் காணும் கண்ணெளி, பாவனையா! நான் கேட்டிடும் பாசப்பேச்சு, பாவனையா! இல்லை! இல்லை! முக்காலும் இல்லை! இதயம் பேசுகிறது! உணருகின்றேன்! ஆகவே அவர்களை விலைகொடுத்து ஆளவந்தார்கள் வாங்கிவிடுவர் என்ற அச்சம் நான் கொண்டிடவில்லை?

நான் கவலைகொள்வதற்குக் காரணம் பெரும்பாலான மக்களை ஏழ்மையிலே தள்ளி வைத்துள்ள எத்தர்கள், வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதுபோல, கேவ லப்படுத்தவும் துணிகின்றனரே என்பது தான்.

மந்தகாச வாழ்வு நடாத்தும் சீமானின் மாளிகை களிலே, கொள்ளை இலாபமடிக்கும் வணிகக் கோட் டங்களிலே கூடிப்பேசுகின்றனர், தம்பி! கொந் தளித்தபடி இருக்கும் இந்த எழுச்சியை எப்படி வீழ்த்துவது என்பதுபற்றி, போர்முறை வகுக் கிருர்கள்,

எதிர்த்துத் தாக்குவதா!

சுற்றி வளைத்துக்கொள்வதா!

பக்கவாட்டத்திலே பாய்ந்து பிளப்பதா!

கோட்டைக்குள்ளே குத்துவெட்டு எழச்செய்வதா!

எந்த முறையிலே தாக்குதலை அமைத்துக்கொள்வது என்று சூழ்ச்சி வகுத்தபடி உள்ளனர். காங்கிரசுக்கு எதிர்ப்பாக உள்ள ஓட்டுகள் சிதறிடாதபடி பார்த் துக் கொள்ள, மும்முனைப் போட்டியைத் தவிர்த்திட வேண்டும் என்பதற்கான தொகுதி உடன்பாடு ஏற்பட்டுவிடினும்,

ஏதாகிலும் ஒரு கட்சியைக் கிளப்பி விட்டோ, தனிப்பட்டவர்களைத் தூபம் போட்டோ, மும்முனைப் போட்டியை உண் டாக்கியே தீருவது என்பது காங்கிரஸ்கார ரின் சூழ்ச்சித் திட்டங்களிலே ஒன்று.

இதனை அவர்கள் மிக வலிவுள்ள திட்டமென்றும் நம்புகின்றனர்.

தி. மு. கழகம் மிகமிகச் சாமான்யர்களாலே நடத்தப் பட்டு வருவது. அதன் வளர்ச்சிகண்டு அருவெறுப்பு கொண்டோர் உளர்; அவர்களைத் தட்டிவிட்டுப் போட்டியை மூட்டிவிடலாம் என்று கருதுகின்றனர்.

தம்பி! முதன்முதல் கழகம் தேர்தலிலே வெற்றி பெற்றபோது, காங்கிரசைக் காலமெல்லாம் எதிர்த்து வந்தவர் ஒருவர்—ஆனுல் நமது கழகம் அல்ல—என் னைத் தருவித்து, தமது வாழ்த்தையும் பாராட்டுதலை யும் தெரிவித்ததுடன், இந்த விதமான வெற்றியும் வளர்ச்சியும் கழகத்துக்குக் கிடைத்திடும், அதிலும் இவ்வளவு குறுகிய காலத்தில் என்று நான் எண்ணி

டவே இயலவில்லே, எப்படியோ நல்ல இடம் கிடைத்து விட்டது; இனி அதனைக் கெட்டிப்படுத்தி கொள்ள வேண்டும், என்றுரைத்தார். மகிழ்ச்சி அடைந்தேன். 'இதுவரையில் கழகத்துக்கு ஆதரவு காட்டாதிருந்து வந்தவர்களெல்லாம்கூட, இது வளருகிறது கட்சிதான் என்பது இப்போது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டதால், இனி ஆதரவு அளித்திட முன்வருவார்கள் என்று பேசி என் ஆவலைக் கிளறினர்.

அந்த ஆவலுடன் எனக்கோர் ஐயப்பாடு கிளம்பிற்று. ஆதரவு கிடைத்திடும் என்கிறரே, எந்த இடத்து ஆதரவோ என்பது பற்றிய ஐயப்பாடுதான்! அவரே அதனைப் போக்கிவிட்டார்; "நான் சில கம்பெனிகளுக்குச் செல்ல முடியும், ஆதரவு காட்டச் சொல்லி; அவர்களுக்கெல்லாம் சில இலட்சங்களை நன்கொடையாகக் கொடுப்பது என்பது மிக எளிதான காரியம்" என்றர்.

கிணறு வெட்டுகிறர், கிளம்புவது கிளம்பட்டும் என்று எண்ணிக்கொண்டு நான் ஏதும் பேசாதிருந்தேன்; அவர் தமது பேச்சைத் தொடர்ந்தார்.

"ஒரு காரியம் செய்யவேண்டும் நீங்கள்; தொழில்களை—பஸ்கள் போன்ற தொழில்களை—தேசியமயமாக்க வேண்டும்; என்ற பேச்சை விட்டு விடவேண்டும்; அது சரியான திட்டமல்ல; அதனை மட்டும் கழகம் மறுத்து விடுமானல், தொழிற் கோட்டங்கள் உமது கழகத்துக்கு நன்கொடை தந்திடத் தாராளமாக முன்வரத் தயக்கம் கொண்டிடா" என்றர்.

புரிகிறதல்லவா, தம்பி! நமது கொள்கையை விலை பேசுகிறர்! என்னிடம்! எந்தக் கொள்கையைக் கூறி மக்களின் பேராதரவைப் பெற்றேமோ, அதே கொள்கையை, கம்பெனிகளிடம் நன்கொடை வாங்கிட, 'விட்டுவிட'ச் சொல்லுகிறர்!!

நமது வளர்ச்சியும் வெற்றியும் அவருடைய மனதிலே அந்த அளவுக்குத்தான் மதிப்பைக் கொடுத்தது.

நான் கோபம் கொள்ளவில்லை. வீண் வேலை அல்லவா! அவர், அவருடைய 'அரசியலை'ப் பேசினர். எங்கள் அரசியல் வேறு என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்.

கழகம் வளர வளர இதுபோல வளைந்து கொடுக்கும் என்ற நினைப்பு நிரம்ப இருந்து வந்தது. இப்போது வெகுவாகக் குறைந்து விட்டது. என்றலும், கழகத்தில் சிலரிடமாவது இந்த வலையை வீசிடலாம், ஏதாவது பிடிபடக்கூடும் என்ற நப்பாசை கொண்டோர் சிலர் உளர்.

அது ஒரு காரணம், கழக ஆதரவாளர்களை வீழச் செய்துவிடலாம் என்று எண்ணித் திட்டமிடுவதற்கு.

ஆனல் இவைகளையெல்லாம்விட தம்பி! அவர்கள் மிகப் பலமாக நம்பிக் கொண்டிருப்பது, உணர்ச்சி ஒரு செல்வம், அதனை அடக்கி ஆண்டால் மட்டுமே பலன் கிடைக்கும் என்பதனை அறியாது, ஓடி ஆடி, உணர்ச்சியைப் பாழாக்கிக் கொள்ளுவோம் என்பதிலேதான். அதனை உணர்ந்துதான் தம்பி! தெளிந்த சிந்தனையாளர் திரு. வி. க. வின் மணிமொழியைத் துவக்கத்திலே தந்துள்ளேன்; உணர்ச்சியைப் பதப்படுத்தி பயன்பெற்றிட முனையவேண்டும்.

மின்னல் கண்ணைப் பறித்திடும்; இருளைப் போக்கிடாது.

அகல் விளக்காயினும் போதும், இருளைப் போக்கிட.

உணர்ச்சியைச் சிதறடித்துவிடுவோம் என்ற எண்ணத்துடன் தம்பி! அவர்கள் நம்பிக்கொண்டிருப்பது, நமது பணி நின்று நிதானமாக, தட்டாமல் தயங்காமல் தொடர்ந்து இருக்க முடியாது என்பதிலே.

இவர்களோ ஏழைகள், இல்லாமை கொட்டிக் கொண்டிருக்கும்; இந்நிலையில் இவர்கள் ஆர்வம்மிக்கவராயினும், தொடர்ந்து எங்கிருந்து தொண்டாற்றப் போகிறர்கள்; இடையிலே சோர்ந்துபோவர், தளர்ந்து போய்விடுவர்—என்று நம்புகின்றனர்.

கூட்டம் கூட்டுவர் கோலாகலமாக.

கொடிகளை நாட்டுவர் கொண்டாட்டமாக,

முழக்கம் எழுப்புவர் இடிபோன்றதாக.

ஆனல், பரபரப்பான வேலையிலே தம்மை ஈடுபடுத்திக் கொள்வதன் காரணமாகவே, அலுத்துப்போய் விடுவர்; தொடர்ந்து பணியாற்றும் இயல்பு எழாது; வலிவு இராது, பழக்கம் இல்லை; பயிற்சி இல்லை என்று பேசிக்கொள்கின்றனர்.

ஒருவிதத்திலே இதிலே பெருமளவு உண்மையும் இருக்கத்தான் செய்கிறது. என்பதனை நான் முன்பு நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலேயே பார்த்திருக்கிறேன்; அதற்காக வருத்தப்பட்டும் இருக்கிறேன்.

தொகுதியின் அமைப்பு வாக்காளர் நிலை, அவர்களின் தொடர்புகள், உள்ள வாக்காளர்களில் எத்தனை சதவிகித்தவர் வாக்கு அளித்திடுவர், ஏன் மற்றறவர் வந்திடுவதில்லை, என்பனபோன்ற தகவல்களைத் திரட்டி அவற்றிற்கு ஏற்ப வேலையை அமைத்துச் செல்வது என்பதிலே, நமது கழகத் தோழர்களுக்கு இருப்பதைக் காட்டிலும் அதிக அளவிலும் நேர்த்தியான முறையிலும் பயிற்சி, காங்கிரசில் உள்ளவர்களுக்கு இருக்கிறது.

இந்த நிலை இப்போது குறிப்பிடத்தக்க அளவுக்கு மாறிவிட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சி தருகிறது. என்றலும் இந்தத் துறையிலே நமது கழகத் தோழர்களின் பயிற்சி மேலும் செம்மைப்பட்டாக வேண்டும்.

பொதுத் தேர்தலிலே நாம் நமது கடமையாகக் கருதி ஓட்டுச் சாவடி சென்றகவேண்டும் என்ற உணர்வு கொண்டவர் தொகை வளர்ந்து வருகிறது என்றலும், இன்றும் அதனைக் கடமை என்று கொள்ளாதாரின் தொகை பெரும் அளவு இருக்கத்தான் செய்கிறது.

ஆனல் காங்கிரஸ் கட்சியில் தேர்தல் தந்திரம் அறிந்தவர்கள், மேற்கொள்ளும் சூழ்ச்சி காரணமாக,

ஓட்டுச் சாவடிக்கு வராதவர்களின் ஓட்டுகளெல்லாம் காங்கிரசு கட்சிக்குக் கிடைத்திடும் விந்தை நடைபெற்றுவிடு கிறது.

ஆகவே, நமது கழகத் தோழர்களிடம் எழுச்சி இருந்தால் மட்டும் போதாது, தொடர்ந்து செயலாற்றும் இயல்பு வளரவேண்டும்; அவற்றுடன் விழிப்புணர்ச்சி வேண்டும், காங்கிரஸ் கட்சியினர் மேற்கொண்டிடும் குறுக்குவழிச் செயல்களைக் கண்டறிந்து தடுத்திட!

தம்பி! அவரவரும் தத்தமது தொகுதியைப் பொறுத்த மட்டில், இப்போதிருந்தே, இந்தத் துறைபற்றி அக்கறை செலுத்தியாகவேண்டும்; முறைகளைச் செம்மைப்படுத்தியாக வேண்டும். நாம் வளர்ந்திருக்கிறோம்; அதனை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்; நம்மை ஒழித்தாலன்றி தமது ஒய்யார வாழ்வுக்கு எதிர்காலம் இல்லை என்பதனை அவர்கள் உணர்ந்து கொண்டுவிட்டுள்ளனர்; ஆகவே இந்த முறை அவர்களின் தாக்குதலிலே கடுமை மிகுதியாக இருக்கும்; முறைகளிலே சூழ்ச்சி அதிக அளவில் இருக்கும்.

காங்கிரசுக் கட்சி இலட்சியத்தை இழந்துவிட்டது: கொள்கை வலிவு அதனிடம் இல்லை; ஆகவே காங்கிரசுக்கு மக்களைத் தன்பால் ஈர்த்திடும் சக்தி கிடையாது என்கிறோம். இது உண்மையுங்கூட! கொள்கை வலிவு இழந்துவிட்டது, காங்கிரஸ் கட்சி என்பது வரையில்.

ஆனால் கொள்கையாளர்கள் இருந்த நாட்களைவிட ஓட்டு வேட்டையில் வல்லவர்கள் சேர்ந்திருக்கும் இந்த நாட்களிலே காங்கிரஸ் கட்சிக்கு, மக்கள்மீது வலைவீசும் சக்தி வளர்ந்திருக்கிறது.

தம்பி! காங்கிரஸ், தூய்மை மிக்கதாக, நாட்டு மக்கள் அனைவரும் 'பயபக்தி விசுவாசம்' செலுத்திடத் தக்க நிலையினதாக இருந்தபோது. தேர்தலில் வெற்றிபெற அந்தக் கட்சி எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கும் தூய்மை இழந்த இன்றைய நிலையில் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

தூய்மை மிக்க தேசிய ஸ்தாபனமாகக் காங்கிரஸ் விளங்கியபோது காங்கிரசின் பெயரால் யாரை நிற்க வைத்தாலும் ஓட்டளித்து வெற்றி பெறச் செய்யவேண்டும் என்றனர்.

மக்கள் அதுபோன்றே தேர்தலில் யார் நிற்கிறார் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் மகாத்மா கட்சிக்கு ஓட்டுப் போட முனைந்தனர்.

யாரை நிற்கவைத்தாலும் என்று நான் மரியாதைக்காகச் சொன்னது, காங்கிரசின் பேரால் எதை நிற்க வைத்தாலும், என்பதாகும்.

காங்கிரசுக் கட்சியைச் சுற்றிவளர்ந்திருந்த ஒரு எழுச்சி யூட்டும் வரலாறு, அந்த அளவுக்கு வலிவளித்தது. முதன் முறை! ஆனால் ஒரே ஒரு முறைதான்!

அடுத்த முறையே, காங்கிரஸ், யாரை நிறுத்தி வைத்தாலும் என்ற 'பேச்சை விட்டுவிட்டது.

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பெருமையைப் பற்றிக் கூறியதுடன், தேர்தலுக்கு நிற்பவரின் நாட்டுப் பற்று, தொண்டு, தியாகம், அறிவாற்றல் ஆகியவை பற்றியே அதிகமாக, விளக்கமாகப் பேசித்தான் ஓட்டுக் கேட்க முடிந்தது.

அந்த அளவு மக்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டிருக்கிறது; இடையில்.

பிறகோ, காங்கிரசுக் கட்சியின் பேரால் தியாகிகள், அறப்போர் வீரர்கள், அஞ்சா நெஞ்சினர், அண்ணல் காந்தியாரின் வழி நின்றிடுவோர் என்போர்களைத் தேர்தலிலே நிற்க வைக்கவில்லை.

அவர்களின் தொகை குறைந்து கொண்டு வந்ததும்,

அவர்களிலே பலர், காங்கிரசாட்சியின் போக்கு கண்டு மனம் வெதும்பி, கட்சியை விட்டு வெளியேறி விட்டதும்,

இதற்கான காரணங்கள் என்று கொள்ளலாம்.

தியாகிகளுக்குப் பதிலாக, கனதனவான்களைத் தேடிப் பிடித்தனர்.

கட்சியின் சாதனைகள் பற்றிப் பெருமிதத்துடன் பேசி ஓட்டுக் கேட்பதற்குப் பதிலாக, வேட்பாளர்களின் நாட்டுப் பற்று, தியாக உள்ளம், மக்கள் தொடர்பு, ஆகியவை குறித்து எடுத்துக்கூறி ஓட்டுக் கேட்பதற்குப் பதிலாக,

இவர் இந்தப் பகுதியில் மிக்கசெல்வாக்குள்ளவர்.

பெரிய நிலச்சுவான்தாரர்.

கோயில் தர்மகர்த்தா.

சத்திரம் சாவடி கட்டியவர்.

ஆயிரம் பேர்களுக்குப் பிழைப்பு தருகிறார்; தமது தொழிலகங்களில்.

இவருடைய பேச்சைத் தட்டி நடந்திடுவோர் எவரும் இந்தப் பக்கத்திலே கிடையாது.

இவர்தான், இங்கு ஜாதித் தலைவர்—குலத்தலைவர்—பெரிய தனக்காரர்.

இவர் பாளையக்காரர் பரம்பரை; ஆள் அம்பு இவரிடம் ஏராளம்.

என்ற இவ்விதமான நாமாவளி பாடி ஓட்டுக் கேட்டிடலாயினர்.

காங்கிரசுக் கட்சி அதற்குள் அந்த விதமாக, பெரிய புள்ளிகளிடம் அடைக்கலம் புகுந்து விட்டது.

தம்பி! கோவை சுற்றுப் பயணத்தின்போது கேள்விப்பட்டேன். இப்போதைய அமைச்சர் இருக்கிறாரே, பழையகோட்டை பட்டக்காரர்-காங்கிரசல்லவா அவர்—அவருடைய,

தகப்பனார் காங்கிரசை எதிர்த்துத் தேர்தலிலே நின்று தமது செல்வம் செல்வாக்கு, ஆள் கட்டு எல்லாவற்றையும் காட்டியும், குட்டபாளையம் பெரியசாமி என்ற காங்கிரஸ்காரரால் தோற்கடிக்கப்பட்டார்; பெரியசாமி என்பவர் சிறு நிலச்சுவான்தாரர்தானும்;

காங்கிரஸ் என்ற அமைப்புக்கு அன்று இருந்து வந்த அப்பழுக்கற்ற செல்வாக்கைக் காட்டுகிறது அந்த நிகழ்ச்சி.

இன்று அவர் திருக்குமாரர், காங்கிரசின் மீது பழி தீர்த்துக் கொண்டுவிட்டார்!

எந்தக் காங்கிரஸ் என் தகப்பனாரைத் தோற்கடித்ததோ அந்தக் காங்கிரஸ் இன்று என் அரண்மனைத் தாழ்வாரத்தில்! அதன் தலைவர்கள், என் எதிரில், சிரித்த முகத்துடன்! அதன் தோண்டர்கள், நான் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர!

இவ்வளவு எளிதாக இந்தக் காங்கிரசை அடிமைப்படுத்த முடிகிறபோது. ஏனோ அப்பா, அதனை வீணாக எதிர்த்துத் தொல்லைப்பட்டார்!

தொட்டால் துவண்டிடும் நிலையில் காங்கிரஸ் இருக்கும்போது, தூக்கிவர ஆளா அனுப்பவேண்டும்!!

என்றெல்லாம் கேட்டு கெக்கலி செய்திடாமலா இருந்திடுவார், மன்றாடியார்! தம்பி! இடையிலே காங்கிரசுக் கட்சி அதன் இயல்பான மதிப்பையும் செல்வாக்கையும் இழந்து விட்டதாலே, இத்தகைய பெருநில முதலாளிகளின் அரவணைப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டி நேரிட்டு விட்டது.

மற்றோர் விந்தை இதிலே என்னவென்றால், பழைய, பழைய கோட்டை பட்டக்காரரைத் தோற்கடிக்கும் அளவு வலிவு பெற்றிருந்த பெரியசாமி என்பவர், காங்கிரஸ் தனது செல்வாக்கு சிதைக்கப்பட்டு, மக்களுடைய எதிர்ப்புக்கும் வெறுப்புக்கும் இலக்காகி விட்ட பிறகு, அதே காங்கிரசின் சார்பிலே நின்று, சோஷியலிஸ்டு நல்லசிவத்திடம் தோற்றுப் போனார்.

ஒருபுறத்தில் காங்கிரசின் செல்வாக்கு, அதன் வேட்பாளருக்கு, வெற்றியைத் தேடிக் கொடுத்திட இயலாத சூழ்நிலையைக் காலம் ஏற்படுத்திவிட்டது.

மற்றோர் புறத்திலேயோ, தந்தையாரைத் தோற்கடித்த காங்கிரசை, திருமகனார் சிறைப்பிடித்து வந்து அரண்மனையில் அடைத்துப் போட்டிடும் சூழ்நிலையும் வடிவமெடுத்து விட்டிருக்கிறது.

இந்தப் புதிய வலிவு மட்டுமே, தம்பி! இன்று காங்கிரசுக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. இந்தப் புதிய வலிவு,

பணம்

ஜாதிச் செல்வாக்கு

துணிந்த நடவடிக்கை

என்பவைகளைக் கொண்டது.

தூக்கிவாடா அவனை! கட்டிவைத்து அடியுங்களடா அவனை! கொளுத்து அவன் வீட்டை! கொன்று




போடு அவன் மகனை! விரட்டு அந்தக் குடும்பத்தை!- என்றெல்லாம் காட்டாட்சி நடாத்தி வந்தவர்கள் இன்று காங்கிரசிலே இடம் பிடித்துக் கொண்டு விட்டதால்,

ஓட்டு வேட்டையில் காட்டு முறையைப் புகுத்திடும் நிலை உருவாகிவிட்டிருக்கிறது.

இந்தத் தைரியத்தால் ஏற்பட்ட நம்பிக்கைத் தவிர, இன்றைய காங்கிரசுக்கு, தேர்தல் வெற்றியிலே நம்பிக்கை கொள்ள வேறு என்ன காரணம் இருக்கிறது.

அரிசிக்காக மக்கள் ஆலாய்ப் பறக்கிறார்கள்.

அகவிலை காரணமாக நாட்டவர் அவதிப்படுகிறார்கள்.

வேலைகிடைக்காமல் வேதனைப்படுகிறார்கள்.

வரிச்சுமையால் வாழ்வு முறிந்த நிலை பெறுகிறார்கள்.

நித்த நித்தம் துப்பாக்கிச் சத்தம்! பிணம்!

நாட்டின்மீது உள்ள கடன் ஏறியபடி இருக்கிறது.

நாணயத்தின் மதிப்பே கெட்டுப் போய் விட்டிருக்கிறது.

ஏற்றுமதி வளரவில்லை; இறக்குமதியைக் குறைக்க முடியவில்லை.

உணவு அமைச்சர் இங்கு இருக்கிறார்; உணவோ அமெரிக்காவில் இருக்கிறது.

இவை, வெற்றி பெற்றிடுவதற்கான காரணங்களா! நம்பிக்கை யூட்டும் குறிகளா!

நேர்மையிலே நாட்டம் கொண்டிடும் ஒரு கட்சிக்கு, இந்த நிலைமைகளைக் காணும்போது நடுக்கமெடுக்கும். ஆனால் பார்க்கிறாயே, தம்பி! அவர்கள், இவ்வளவு எரிச்சலையும் ஏமாற்றத்தையும் மக்கள் மனதிலே மூட்டி விட்ட பிறகும், நாங்கள்தான் வெற்றி பெறப் போகிறோம் என்று எக்காளமிட்டு வருவதனை!

## இன்புற்று வாழ்வோமே!

**மு. கோசலைராமன்**

சத்தியத்தின் நித்தியமாய்
சிலுவையிற் துடித்தபோதும்
எத்தர்க்கு இரங்கிநின்ற
ஏந்தலவன் யேசுவென்பான்;
எத்திக்கும் ஏற்றமுற
இங்குதித்த இந்நாளில்,
சித்தத்தில் ஒளிந்திருக்கும்
சிறுமையை ஒழித்தென்றும்
வித்தகனும் தேவனவன்
வழிநிற்க உறுதிகொண்டு,
சத்துகடல் அலையினைப்போல்
கூத்திட்டே ஒற்றுமையாய்,
தித்திக்கும் தெள்ளமுதாம்
திந்தமிழில் பாட்டிசைத்தே,
இத்தலத்தில் எல்லோரும்
இன்புற்று வாழ்வோமே!

எதனால் பிறந்தது இந்தத் துணிவு. சாதனைகளைக் காட்டி ஓட்டு வாங்கிட முடியாது என்றாலும், நோட்டுகளைக் காட்டி ஓட்டுகளை வாங்கிடலாம் என்ற துணிவுதான், தம்பி! இன்று அவர்களுக்கு உள்ள நம்பிக்கை!

நாட்டின் பல பகுதிகளில் இன்னும் இருந்து வரும் காட்டாட்சி நடத்திடுவோர், தொழிலதிபர்களாக இருப்பதால். நிலச்சுவான் தாரராக இருப்பதால், ஜாதித் தலைவராக இருப்பதால், கிடைத்திடும் வலிவினைக் காட்டி, மக்களை ஒடுக்கிடும் விந்தையில் கைதேர்ந்தவர்கள். காங்கிரசில் இருப்பதால், அவர்கள் இந்தத் தேர்தலிலே எல்லா முறைகளையும் கையாண்டு, வெற்றி பெற்றுத் தருவர் என்ற நம்பிக்கை.

ஆகவே தம்பி! இந்தத் தேர்தலிலே நாம் ஈடுபடுவது, வெறும் கட்சிச் சுண்ணோட்டத்துடன் என்று கூடக் கூறுவதற்கில்லை. அரசியலில், அதிலும் மக்களாட்சி முறையில் புகுத்தப்பட்டுள்ள காட்டாட்சி முறையை எதிர்த்து ஒழித்திடும் ஒரு தூய தொண்டிலே நம்மை ஈடுபடுத்திக்கொள்கிறோம் என்று பொருள்.

காட்டாட்சி நடாத்தி வந்தோரின் கசையடிக்குத் தமது தசையைக் கொடுத்த உழைப்பாளிகள் பலப்பலர்!

காட்டாட்சியினரால் உருக்குலைக்கப் பட்ட உத்தமர்கள் ஏராளம்!

வீடு இழந்தவர்கள், விழி இழந்தவர்கள், வாழ்வு இழந்தவர்கள் தன்மானமே கூட அழிக்கப்பட்டு விட்டவர்கள் ஏராளம்.

அவர்களெல்லாம் கொட்டிய குருதி, வடித்த கண்ணீர் எழுப்பிய பெருமூச்சு, காலவேகமாக, காட்டாட்சியினரின் பிடியைத் தளர்த்திற்று.

சிற்றரசர்கள்

ஜெமீன்தாரர்கள்

மிட்டா மிராசுகள்

போன்றாரின் ஆர்ப்பரிப்பும் அட்டகாசமும் ஆதிக்கமும், குறைக்கப்பட்டது; அவர்களின் கெடுமதியும் கொடு நினைப்பும் புற்றுக்குள் அரவமென்று ஓடுங்கிற்று. ஏழை விழித்துக்கொண்டான்! பாட்டாளி கேள்வி கேட்கிறான்! அழுத கண்களிலே அனல் கிளம்புகிறது! கூப்பிய கரத்தினர், கொடுவாள் தூக்கும் நிலை வந்திடுவது தெரிகிறது! காலம் மாறி விட்டது! இனி நமது காட்டாட்சி நடவாது!!—என்று எண்ணி, அத்தகைய ஆதிக்கக்காரர்கள் தமது ‘தர்பாரை’ நிறுத்திக் கொள்ளத் தலைப்பட்டனர்.

அந்த நேரமாகப் பார்த்துத்தான் வெறும் கட்சி ஆதிக்கத்துக்காகவேண்டி அந்த காட்டாட்சி நடத்திடுவோரை, காங்கிரஸ் தலைவர்கள் அழைத்துவந்து அவர்களிடம் அரசியலை ஒப்படைத்திருக்கிறார்கள்!

முடிந்து விட்டது நமது ஆதிக்கம் என்றெண்ணி மூலைக்குச் சென்றுவிட்டவர்களுக்கு, காங்கிரசின் மூலவர்கள் முதல் தாம்பூலம் கொடுத்து, கூடத்தில் கொலு இருக்கச் சொல்லுகிறார்கள்.

கொடுமை! கொடுமை! அது மட்டுமல்ல தம்பி! இது எத்தகைய எதிர் காலத்தை உருவாக்கும் என்று உணர்ந்திடக்கூடிய எவரும் இதனை, மடைமை! மடைமை! என்றே கூறுவர்.

முதலாளிகளையே, வேட்பாளர்களாக நிறுத்த முனைகிறார்கள், இது கட்சிக்கோ, நாட்டுக்கோ, நாட்டுக்குத் தேவையான சோஷியலிசத்துக்கோ நல்லது அல்ல என்று மனம் குமுறி, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் பலர், டில்லிக் கூட்டமொன்றில் பேசியது பற்றி முன்பு குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது மாளவியா எனும் மற்றோர் காங்கிரஸ் தலைவரும், மாரடித்து அழுகிறார், இப்படியா முதலாளிகளுக்கு இடம் கொடுப்பது; காங்கிரசுக் கட்சி அவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறதே; நாடு

கெடுமே; சோஷியலிசத் திட்டம் பாழ்படுமே என்றெல்லாம்.

கேட்பவர்கள் யார்! அவர்கள் வெகு தூரம் சென்றுவிட்டார்கள்; இனித் திரும்பி வருவது இயலாத காரியம். அவர்கள் மிக இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டுவிட்டனர்; இனி அவர்களைப் பிரித்துவிடுவது முடியாத காரியம்.

தம்பி! வளர்ந்து விட்டிருக்கும் எதிர்ப்பை அழித் தொழிக்க, காங்கிரசுக்கு, தனக்குள்ள வலிவு போதுமானதாக இல்லை! ஆகவே சீமான்களின் வலிவைத் துணையாகப் பெறுகிறது. சீமான்களைக் கொண்டு, இந்த எதிர்ப்பை முறியடிக்கத் திட்டமிடுகிறது. மக்களின் உரிமைக்குரலை அடக்கிட மமதையாளர்களின் துணையைத்தேடிப் பெறுகிறது. அந்த மமதையாளர்கள்.

"கைத் திறனும் வாய்த் திறனுனும் கொண்ட மக்கள் கண்மூடி மக்களது உடைமை எல்லாம் கொத்திக் கொண்டு ஏப்பம் விட்டவர்"

என்பதனை அறிந்து, அவர்களை ஏவிவிட்டு ஜனநாயகத்தைச் சிதைத்திடத் துணிந்து விட்டனர்.

ஆகவே இம்முறை நாம் தேர்தலிலே ஈடுபடுவது, கட்சியின் வெற்றிக்காக என்ற குறுகிய நோக்குடன் அல்ல; அரசியல் ஆதிக்கத்துக்காக அமைக்கப் பட்டுள்ள

கூட்டுச் சதியை முறியடிக்க

என்பதனை உணர்ந்திட வேண்டும்.

ஆகவே நமது பணியிலே தம்பி! உணர்ச்சி பக்குவப்படுத்தப் பட்டதாகி, பயன்படுத்தப்பட வேண்டும்.

மிகப் பெரிய காரியத்தை மேற்கொண்டு விட்டுடோம்,

மிகப் பயங்கரமான ஒரு வளையத்தை உடைத்துப் போட முனைந்திருக்கிறோம்.

மிகக் கேவலமான ஒரு கூட்டுச் சதியை உடைத்தெறியும் காரியத்தை மேற்கொண்டு விட்டிருக்கிறோம்.

இதற்குத் தேவைப்படும் ஆற்றலை, நாம் நமது உணர்ச்சி மூலம் பெறுகிறோம்.

பெற்றுள்ள உணர்ச்சி, என் உள்ளத்திலே தளராத நம்பிக்கையைத் தந்துளது.

திரு வி. கல்யாணசுந்தரனாரின் கருத்தினை, இது போது கண்டேன்; நாம் மேற்கொண்டுள்ள பணிக்கு மிக மிகத் தேவைப்படும் அறிவுரை அஃது என்பதனால் அதனைத் துவக்கத்தில் அளித்துள்ளேன்.

உணர்ச்சி ஒரு செல்வம்.

அதனை அடக்கி ஆண்டிடின் பலன் கிடைத்திடும்.

அண்ணன்,

அண்ணாதுரை

20-11-66


வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவேகோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவே நெஞ்சையள்ளும்

குர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் :: சென்னை-8

குறுநாவல்:

# மறு வாழ்வு!

இளங்கீரன்

"அழகு! அவளை வெச்சிக் குடும்பம் நடத்தணுமாம். அப்போதான் அவ, சம்மதிப்பாளாம்!"—வேதனையோடு முத்துப் பண்டாரம் சொன்னார்.

"அவ, சொல்லறதும் சரிதானே! நீங்கதான் சம்சாரியா ஆயிடுங்களேன்?"—அழகுப் பண்டாரம் ஆலோசனை கூறினார்.

முத்துப் பண்டாரம் பதில் எதுவும் செல்லாது சிந்தனையில் ஆழ்ந்தார். அழகுப் பண்டாரம் அங்கிருந்து அகன்று மற்றப் பண்டாரங்கள் இருக்கும் கோயில் முன் வாசலுக்குப் போனார்.

அன்று முழுவதும் முத்துவுக்குப் பசி எடுக்கவில்லை; தாகம் எடுக்கவில்லை, தூக்கமும் பிடிக்கவில்லை, படுக்கையை விரித்து உட்கார்ந்தவர், அப்படியே இருந்தார்.

காய்ச்சலோடு கட்டழகையும் சேர்த்துக் கொண்டுவந்த அபலைப் பெண் அகிலாண்டத்தை அவரால் மறக்கவே முடியவில்லை. இந்த ஐந்தாண்டு காலத்தில்—கோயிலை நாடி இதுவரை வந்து அவர் அனுபவித்த பெண்களிலேயே இவள் ஒருத்திதான் அழகும் இளமையும் பொருந்தியவள். எப்படியாவது அகிலாண்டத்தின் மனதை மாற்றி ஆசைக்கு அடிபணியவைக்க அவர் துடியாய்த் துடித்தார்.

அவளிடமிருந்த அழகு, ஆசையை அணைக்க விடவில்லை; அவள் விதித்த நிபந்தனையோ அவளை அணைக்க விடவில்லை. செய்வதறியாது திகைத்தார்; எதையோ எண்ணி எண்ணி மனதைக் குழப்பினார்.

அவரது முப்பத்தைந்தாண்டு காலவாழ்வு மீண்டும் நினைவுக்கு வந்தது. முற்றும் துறந்த முனிவராகி சித்த வைத்திய முறை முழுவதையும் கற்றுத் தெளிந்து விடவேண்டுமென்று எண்ணினார். அந்த எண்ணத்திற்கு எமனாக வந்து இல்லறத்தில் ஈடுபடுத்தினாள், அவரது, அன்னை கன்னியம்மாள். இல்லறமாவது ஈடேறிற்றா? அதுவும் நடைபெறாமல் மனைவியைப் பறித்துத் தனிமையில் ஆழ்த்தியது காலம். உள்ளத்தில் இருந்த ஆசாபாசங்களை எல்லாம் மறந்து பல கல்தூரம் கடந்து ஆள் நடமாட்டம் அற்று—சிலுசிலுவென சிந்தை குளிர இன்னிசைபாடும் செண்பகாதேவி ஆற்றங்கரையை அடுத்த மலைக் குகையில் வாழ்ந்தாலும் அங்கும் விசுவாமித்திரரைக் கலைத்த மேனகை போல் செண்பகம் வந்து சிந்துபாடினாள்; சிதைந்தது மனம். அவள் உறவும் நீடிக்கவில்லை.

குகையைத் துறந்து மலையைக் கடந்து கீழிறங்கி வந்து குற்றாலநாதர் சன்னிதியை அடைந்தார். இங்கும் குழப்பம்தான் மிஞ்சியதே ஒழிய மனம் நிம்மதியடைய வில்லை.

மனம்தான் அவரை என்னபாடு படுத்துகிறது? அதுஎன்ன ஒரு நிலையிலா நிற்கிறது? இடத்திற்கு ஒரு நிறம் மாறும் பச்சோந்தியைப் போல் மாறி மாறி அவரை வாட்டி வதைத்து எடுத்தது.

முதன் முதலில் அவர் இங்கு வந்தபோது யார் கையும் படாமல் பளிங்குபோல் தெளிந்து ஓடும் தேனருவித் தண்ணீரைப்போல், அவர் மனம் இருந்தது. மலைக்குகையில் செண்பகத்தைப் பார்த்தபோது சில மனிதர்களால் கை தொட்டுக் கலங்கிய செண்பகாதேவியருவித் தண்ணீரைப்போல் அது மாறியது. பின்னர் குகையைவிட்டுக் கீழேவந்து கோயிலில் தங்கி அகிலாண்டத்தைப் பார்த்த பிறகு, வருவோர், போவோர் எல்லா மனிதர்களும் குளித்துக் கலங்கிய குற்றாலத்துத் தண்ணீராகமாறி அந்த மனம் அவரையும் கலக்கிக் கொண்டிருந்தது.

"என்னை யாராவது ஏத்துக்கிட்டுக் குடும்பம் நடத்தினா, நான் அணுபிசகாது கூடவே இருந்து மாடா ஒழைக்கத் தயார்" என்று அகிலாண்டம் சொன்னதும், "சாமி! நீங்களும் சம்சாரியா ஆயிடுங்களேன்" என்று அழகுப் பண்டாரம் சொன்னதும் அவர் காதுகளில் விடாது ரீங்காரமிட்டு எதிரொலித்துக் கொண்டே இருந்தன.

எந்தவொரு துறவற வாழ்வை அவர் விரும்பி விரும்பி ஏற்றாரோ அதே வாழ்வு இப்போது அவருக்கு வெறுப்புத் தட்டியது. சுற்றி இருப்போரும் சூழ்நிலையும் அவரை இல்லற வாழ்வுக்குத் திருப்பினார்கள்.

செண்பகத்தோடு தொடர்பு கொண்டு, அது வெளியாருக்குத் தெரிந்து, குகையை விட்டுயாரும் அறியாது குற்றாலம் வந்தபோது அவருக்கு இல்லற ஆசை ஏற்பட்டிருந்தால் சொந்த ஊருக்கே—உற்றார் உறவினர்களோடு போய்ச் சேர்ந்திருப்பார். அதற்கான அழைப்பு அவரைத்தேடி வந்தது.

ஒருமுறை வேலூரிலிருந்து குற்றாலத்திற்கு உல்லாசப் பயணம் வந்த சிலர் முத்துவை அடையாளம் கண்டு அவரோடு பேசி நலம் விசாரித்துச் சென்றார்கள்.

அவர்கள் சென்ற சில நாட்களில் வாட்டசாட்டமான வாலிபன் ஒருவன் முத்துவைத் தேடி வந்தான். அவரது இருப்பிடத்தையும் ஆள் அடையாளத்தையும் நன்கு தெரிந்து வைத்திருந்த அவன், அருகில் வந்து "அப்பா!" என்றழைத்தான்.

ஒருகணம் திணறிய முத்து சிறிதே சிந்தனையில் ஆழ்ந்தார். தாயின் கண்ணீரைத் தன்னால் தடுத்து நிறுத்த முடியாததால் தையல் ஒருத்தியின் தளிர்க் கரம்பற்றி அவள் வயிற்றில் பிறந்த ஒரேமகன் தாயைப் பறிகொடுத்தும் சகோதரியின் கையில்

அவனை ஒப்படைத்ததும் அவருக்குச் சிறிது சிறிதாக நினைவு வந்தது. கனவில் கூட எண்ணிப் பார்த்திருக்காத வேளையில் தனக்குப் பிறந்த மகன் தன்னைப் போலவே எதிரில் வந்து நிற்பதைக் கண்டதும் புயல் கொண்ட கடலானார். உள்ளத்தே உந்தி எழுந்த ஆசாபாசங்களை எல்லாம் அடக்கிக்கொண்டு "யாரப்பா, நீ?" என்று எதையும் அறியாதவர்போல அவனைப் பார்த்துக் கேட்டார்.

"அப்பா என்னைத் தெரியலையா? நான் ஒங்க மகன் மாசிலாமணி வந்திருக்கேன்!!

"அப்படியா! மெத்த மகிழ்ச்சி! இங்கு எப்படி வந்தாய்?"

"ஊரிலே சொன்னாங்க, நீங்க இங்கே சாமியாரா இருக்கிறதாக...அப்பா! நான் பாடுபடுகிறேன்; பணம் சேர்த்து வச்சிருக்கிறேன். நீங்க ஏன் இங்கே தனியாக இருக்கனும்? என்னோட வந்து எனக்கு வழிகாட்டியா இருங்க! இந்தப் பிச்சைக்கார வாழ்வை விட்டுட்டு என்னோடு புறப்படுங்க..."

"மகனே! உன்னைப் பார்க்கும் போது நான் மகிழ்ச்சியடைகிறேன். என் இரத்தத்தின் இரத்தம், சதையின்சதை என்னைப்போல் என் முன்னாலேயே உன் உருவத்தில் நிற்பது கண்டு நான் அளவிலா ஆனந்தம் கொள்கிறேன். ஆனால் நீ நினைப்பது போல் நான் இங்கு பிச்சை எடுத்து வாழவில்லை. நான் கற்ற வித்தைகளிலிருந்து திறமையோடு மருந்து தயாரிக்கிறேன். அதை விற்று, அதிலிருந்து வரும் வருமானத்திலிருந்து நான் இது நாள் வரை வாழ்ந்து வருகிறேன்; இனியும் அப்படியே வாழ்வேன். என்னைப் பொறுத்தவரையில் மனை, மாடு, மக்கள் சுற்றம்—பந்தபாசங்கள் எல்லாவற்றையும் வெறுத்துத் துறவற வாழ்வை விரும்பி ஏற்றவன் நான். எது நேர்ந்தாலும் இனி எனக்கு இதுதான் முடிவு. நான் இந்த இடத்தை விட்டு எங்கும் வர விரும்பவில்லை. இங்கேயே வாழ்ந்து இங்கேயே மடிந்து விடுவேன். என்னையாரும் அழைக்க வேண்டாம். நீயே உழைத்து உன் வாழ்வைச் சிறப்பித்துக் கொள். நீ எங்கு எப்படி இருந்தாலும் நான் உன்னை வாழ்த்திக்கொண்டே இருப்பேன். இப்போது நீ இங்கிருந்து போகலாம்."

வெட்டொன்று துண்டிரண்டெனப் பேசித் தன் மகனை அனுப்பி வைத்தார். அழாமல் அழுது அவனும் சென்றான்.

இந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தபோது முத்துவுக்கு வேகம் வந்தது. எப்படியும் வாழ்ந்தே தீர்வது என்ற முடிவுக்கு வந்தார்.

'அகிலாண்டத்தோடு குடும்பம் நடத்தினால் என்ன?"

மீண்டும் அவர் மனம் அலைபாய்ந்தது.

'அகிலாண்டம்தான் எவ்வளவு அழகாக இருக்கிறாள்! எவ்வளவு செழுமையான உடல்வாகு! இவளை விட்டால் இல்லற வாழ்வுக்கு இனியொருத்தி கிடைக்கவா போகிறாள்?'

இச்சைக்கு ஆளாகித் தம்மை இழந்த பிச்சைக்காரப் பெண்களைக் கெடுத்து உடலால் துறவறமும் உள்ளத்தால் இல்லறமும் கொண்டு வாழும் போலி வாழ்வு அவருக்கு அலுத்து விட்டது.

அகிலாண்டத்தை அழைத்துக் கொண்டு "அம்மா! தாயே!" என்று வீடு வீடாகச் சென்றோ அல்லது கோயில் வாசல் முன்னிருந்து "ஐயா! சாமி" என்றோ பிச்சையா எடுக்கப் போகிறார்? காட்டில் விளைகிறது மூலிகை! மனதில் இருக்கிறது திறமை! பக்குவமாக மருந்து தயாரித்தால் நோயாளிகள் வரமாட்டார்களா? காசு வந்து குவியாதா? அதைச் சிக்கனப் படுத்தினால் சீரான வாழ்வு அமையாதா? கோயில் ஓரத்து ஒண்டிக் குடித்தனத்தை ஒழித்து விட்டுக் கொஞ்சும் மொழியாளைக் கைப் பிடித்துக் கோலாகலமாக வாழலாமே! வாடகைக்கு வீடும் அமர்த்தி அதோடு வைத்திய சாலையையும் வைத்து விடலாமே!

எதிர்கால வாழ்வு கண்ணெதிரே திரைப்படமாக விரிந்தது. எதையோ எண்ணி, முத்துப் பண்டாரம் ஒருமுடிவுக்கு வந்தார்.

கோயில் மணி நான்கடித்தது.

கனவிலிருந்து விடுபட்டவர்போல் சுற்றும் முற்றும் பார்த்தார். பரபரவென்று எழுந்தார். சித்தவைத்திய நூல்களையும் ஏடுகளையும் காடுகளில் சேகரித்த மூலிகைகளையும் கைப் பக்குவமாகத் தயாரித்த மருந்துகளையும் தனியாக எடுத்து வைத்தார். காவியுடைகளைக் களைந்து கமண்டலம், தண்டு, உருத்திராட்சை மாலை, பழைய கந்தல் துணி ஆகிய எல்லாவற்றையும் எடுத்து ஒரு மூட்டையாகக் கட்டினார். அதை எடுத்துக்கொண்டு நடந்தார். அருவிக்குச் செல்லும் வழியிலுள்ள பாலத்தில் ஏறிப் பாதிதூரம் சென்று கிழக்கே திரும்பி நின்றார். கையிலிருந்த மூட்டையைத் தலைக்குமேலே தூக்கினார். சுழித்து நெளித்து நுங்கும் நுரையுமாக ஓடும் அருவித் தண்ணீரில் 'தொப்' என்று அதை வீசி எறிந்தார்.

தன்னிடம் தலைகொடுத்த மனிதர்களது உடலையும் உள்ளத்தையும் தூய்மைப் படுத்தும் அருவித் தண்ணீர், தன்னையும் ஏய்த்துப் பிறரையும் ஏய்த்து வாழும் போலித் துறவற வாழ்வையும் அடித்துச் சென்றது.

அலுத்துச் சலித்துப் பொய்த்துப் போன போலி வாழ்வைத் துறந்து உழைத்து உடல் வளர்த்து மன நிம்மதியோடு வாழும் மறு வாழ்வைத் துவங்கப் புது வேகத்தோடு தகரப் பிறையை நோக்கி நடந்தார், முத்து.

அகிலாண்டத்தின் அருகில் அழுதுகொண்டிருந்த குழந்தையை ஆவலோடு தூக்கித் தோளில் போட்டுக் கொண்டார். மனதில் தேங்கிய ஆசையை எல்லாம் ஒன்று கூட்டி "அகிலாண்டம்" என்று அன்பு ததும்ப அவளை அழைத்தார். பொங்கிய மகிழ்ச்சியோடு மங்கிய பழைய துணிகளை உதறி விட்டு அவள் எழுந்தாள்.

கள்ளமிலா வெள்ளை உள்ளம் கொண்ட குழந்தை முத்துவின் தோளிலிருந்து அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்துச் சிரித்தது.

(முற்றும்)

★

தொடர் கதை :

# மெல்லிய காதல்

**புலவர் தி. நா. அறிவுஒளி**

வெள்ளிக் குவளையில் வாதுமைப்பருப்பு முதலியவை கலந்து காய்ச்சி வைக்கப்பட்ட பால் தூசிபடிந்து திரிந்து கெட்டுப் போயிருந்தது.

அறப்பாவை அழகாக அடுக்கிவைத்த இனிப்புகள், சிற்றுண்டிகள், கனிகள் யாவும் தொடுவாரற்று வைத்த நிலையிலே கிடந்தன.

தொல் பொருட்காட்சி நிலையத்திலிருக்கும் பழங்காலச் சின்னங்களைப் போலிருந்த அவற்றைப் பார்த்ததும் வெள்ளிவீதிக்கு அடக்கமாட்டாத—ஆற்றமாட்டாத-அணையிட முடியாத வெறி மூண்ட ஆற்றாமையும் சீற்றமும் அவலமும் சீறிப் பாய்ந்து பொங்கிப் புரண்டு முட்டி மோதி அலைபாய்ந்து வழிந்தன. குமுறிக்குமுறி அழுதாள். உதடுகளைக் கடித்து உள்ளத்துக்குக் கடிவாளமிட முயன்று முயன்று தோற்றாள்.

உணர்ச்சிகளை ஊமையாக்கினாள்; ஆசைகளைக் குருடாக்கினாள்; ஆண்மையைத் துணைக்கழைத்தாள்.

உடலின் கொதிப்பையும் உள்ளத்தின் கொதிப்பையும் ஒருங்கே அடக்கிக் கொண்டு, அறையை விட்டு வெளியே வந்தாள் வெள்ளிவீதி.

கண்விழித்துக் கிடந்தமையால் அவள் முகம் 'ஓ'வென்று வெறுச்சோடிக் கிடந்தது. சிவந்திருந்த கண்கள் உடலின் சோர்வு ஆகியவை ஒருவகை நிறமாற்றத்தை உண்டாக்கியிருந்தன.

எதிரில் வந்த அறப்பாவை வெள்ளிவீதியைக் குறும்பாக நோக்கி நகைத்தாள்.

"வெள்ளிவீதி, வெந்நீர் காய்கிறது. குளித்து விட்டு பலகாரம் சாப்பிடு." என்று கூறினாள். வெள்ளிவீதியின் கன்னத்தைக் குறும்பாகக் கிள்ளி அனுப்பினாள்!

வறண்ட புன்னகையைச் சிந்திவிட்டு வெள்ளிவீதி குளிக்கச் சென்றாள்.

படுக்கையறையைத் துப்புரவு செய்துவிட்டு வந்த அறப்பாவை, தன் கணவர் சுடர்க்கொழுந்திடம் குறும்பாக நகைத்து,"நாமெல்லாம், 'சாப்பாடுகள்!' உங்கள் மைத்துனரும் வெள்ளிவீதியும் பாலைக் கூடப் பருகவில்லை" எனக்கூறிக் குலுங்கிச் சிரித்தாள்!

அவள் சிரிப்போடு போட்டியிட்டது சுடர்க்கொழுந்தின் சிரிப்பு!

"ஓ! கதை அப்படியா? புகழேந்தி எங்கே? திருமணம் வேண்டா; வேண்டா என்கிறவர்களெல்லாரும் பெரிய ஆட்கள்தாம்!"—

குளித்துவிட்டுத் திரும்பிய வெள்ளிவீதி இவர்கள் பேச்சைக் கேட்டு உள்ளம் வாடினாள்.

'உண்மையல்லாததை உலகம் உண்மை என்று எவ்வளவு அருமையாக நம்புகிறது!' என எண்ணிக் குமுறினாள்.

புத்துடை பூண்டாள். வெள்ளிவீதியின் கண்களைத் தூக்கமும் உள்ளத்தைத் துன்பமும் அழுத்தின. சிற்றுண்டியைக்கூட விருப்பமாக உண்ண இயலவில்லை. அவளுக்கு விருப்பமான வெங்காய ஊத்தப்பத்தையும் அரைகுறையாக உண்டு எழுந்தவள் படுக்கையிற் சென்று விழுந்தாள்.

தன்னை மறந்து உறங்கினாள்.

ஏக்கமும் கனவும் நிறைவேற வேண்டிய நேரத்தில் ஏமாற்றமும் துயரும் எதிர்பாராத அதிர்ச்சியும் அவளைத் தாக்கி வீழ்த்தினால் அந்தப் பேதை என்ன செய்வாள்?

காலையிலேயே வீட்டை விட்டுச் சென்ற புகழேந்தி நண்பகல் பன்னிரண்டு மணிக்கே இல்லத்திற்கு மீண்டான். தன்னறைக்குட் சென்றான். படுக்கையில் வெள்ளிவீதி தன்னை மறந்து உறங்கக் கண்டான்.

கண்ணீர் வழிந்து காய்ந்த சுவடுகளைக் கன்னத்தில் கண்டான். அக்காட்சி அவன் உள்ளத்தைச் சுட்டுத் தீய்த்தது.

'குற்றமறியாத கொழுந்துள்ளம் கொண்ட குமரிநல்லாளுக்குக் கொடுமை இழைத்து விட்டேனே!' என நெஞ்சம் நெக்குருகினான்.

அழகியமுகம்; தெளிவான தீர்ந்த உருவ அமைப்பு, நிறைவான தோற்றம், இளமையின் எழுச்சிப் பொலிவு முழுமையாகப் பொலிந்தநிலை, தூயநெஞ்சின் ஒளி, துடிப்பான காட்சி அவ்வளவும் அழகோ அழகெனப் பொங்கித் துளும்பிப் பொலிவதைக் கண்டான்.

ஆனால், நேற்றிரவு?

வெள்ளிவீதியின் சீற்றமும் ஏமாற்றமும் ஏக்கமும், அவலமும், வெறியும், எரிச்சலும் இவ்வளவு அவ்வளவு என அளந்துரைக்க முடியுமா?

அதை எண்ணியதும் புகழேந்தியும் உள்ளமும் உடலும் சிலிர்த்து நடுங்கி ஓய்ந்தது.

குருதி வெம்மையுற்றது.

தளர்ந்த உள்ளம் இறுகியது.

உலர்ந்த உதட்டை நாவினால் தடவினான் படுக்கையில் கை ஊன்றினான்.

அந்தச் சிறு அசைவினால் வெள்ளிவீதி உறக்கம் கலைந்து எழுந்தாள்.

திடுக்கீடு,

வியப்பு,

விழி மலர்ச்சியில் விளையாடும் மருட்சி.

அலைவின் அதிர்வு இவ்வளவும் ஒரு நொடியில் அவள் முக அரங்கில் நடமாடி ஓய்ந்தது.

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


கணவனை எதிரில் கண்டதால் ஏற்பட்ட மின்னதிர்ச்சித் தாக்குதலின் துடிதுடிப்பும் துள்ளலும் அவளிடம் அழகிய உணர்விலக்கிய நாடகத்தை உண்டாக்கியது.

விரைந்து எழுந்து நின்றாள்.

அவள் அகத்திலும் முகத்திலும் பல்வகை உணர்ச்சி குழப்பங்கள்! உணர்ச்சிக் குமுறல்கள்!

புகழேந்தி நிமிர்ந்தான்.

"வெள்ளிவீதி!"

வெளியே செல்ல முனைந்தவள் தலைகுனிந்தவாறு தயங்கி நின்றாள்.

அவள் உணர்ச்சி எரிமலைகளை அவன் அழைப்பு வெடிக்கச் செய்ததோ?

"நான் பேசியது உனக்குத் துன்பம் அளித்து விட்டதா? நான் ஒரு தவறும் செய்யாதவன் வெள்ளிவீதி..."

அவன் பேச்சைக் கேட்க விரும்பாதவள் போல ஓரடி முன் வைத்தாள்.

புகழேந்தியின் உள்ளத்தில் ஊழித்தீ பாய்ந்து சுட்டாற் போன்ற உணர்ச்சிச் சூடுபட்டது.

துடிதுடித்தான்.

அவள் புறக்கணிப்பு—அவன் ஆண்மை உள்ளத்தில் ஆற்றமாட்டாத சீற்றவெறியை மூட்டியது.

'என்ன கொழுப்பு! என் பேச்சைக் கேட்கக்கூட இவளுக்கு விருப்பமில்லையோ? அத்தகைய குற்றமா நான் செய்துவிட்டேன்? உண்மையைக் கூறியது குற்றந்தானா? இதைச் சொல்லாமல் இருந்திருந்தால் என்பால் இவள் அன்புகரை புரண்டு பாய்ந்திருக்குமோ? சீ—"

புகழேந்தியின் உணர்வு சீறியது.

மீண்டும் நின்ற வெள்ளிவீதி சற்றே திரும்ப அவனை அரைகுறையாகப் பார்த்தாள்.

"வீட்டிலிருப்பவர்களுக்கு நம் நிலை தெரிய வேண்டியதில்லை. நம்மை நாமே காட்டிக் கொடுத்துக்கொள்வது நல்லதில்லை. அப்பா உடல்நலமில்லாமலிருக்கும்போது நம்சிக்கல் பிறருக்குத் தெரிய வேண்டாமென நினைக்கிறேன்." எனச் சுவரைப் பார்த்த வண்ணம் சொன்னான்.

தலையையும் அசைக்காமல் ஓவியச் சிலைபோல அதனைக் கேட்டுவிட்டு அமைதியாக ஒரு மறுமொழியுங் கூறாமல் வெளியேறினாள் வெள்ளிவீதி.

அவள் உள்ளம் அலறியது; அலைமோதியது. அவலக் கடலில் ஆழ்ந்தது.

ஐயோ! அவரிடம் ஏன் இப்படி நடந்து கொண்டேன் எனவியப்பும் வெறுப்பும் அவளை மூழ்கடித்தது!

அவள் காதலுணர்வு நெஞ்சின் ஆழத்தில் 'அத்தான்!' என அலறியழுதது.

(வளரும்)




## பன்னிரண்டு ஆண்டுகளில்
## வருவாய் இரட்டிப்பாகிட
## தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடைமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

### குடும்பநலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்:—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
66. [illegible]